ஸ்ரீஹரி :

சினிமா

பொழுதுபோக்கா அல்லது அழிவுக்கு சாதனமா ?

எழுதியவர் :

ஹனுமான்பிரஸாத் போத்தார்

❀

வோர் :

கோரக்பூர்

பதிப்பித்தவர் :
கனசியாம்தாஸ் ஜாலான்,
கீதா பிரஸ், கோரக்பூர்

NW
N56

முதற் பதிப்பு: மார்ச் 1956
8000

114008

விலை அணா ஒன்று

அச்சிட்டவர்:
ஹிந்தி பிரசார பிரஸ், சென்னை

ஓம்

ஸ்ரீ ஹரி:

சினிமா

பொழுது போக்கா அல்லது அழிவுக்கு சாதனமா ?

சினிமாவினுல் ஏற்படும் பயங்கர விளைவுகளைப் பற்றி நம்மிடம் பல கடிதங்கள் வந்துள்ளன. டில்லியிலிருந்து ஒருவர் எழுதுகிறார்—"நான் ஒரு சாதாரண மனிதன், புலன்களை அடக்கி வெற்றி கண்டுள்ள தபஸ்வியோ, யோகியோ அல்ல. இருந்த போதிலும் என்னல் முடிந்த மட்டில் நான் தீமைகளிலிருந்து தூர விலகியிருக்கவே விரும்புகிறேன். [ஆனல் நான் என்ன செய்யட்டும், டில்லியின் ஒவ்வொரு தெருவிலும் சினிமா நடிகைகளின் நடிப்புக்களின் பற்பல சித்திரங்கள் சுவர்களில் ஒட்டப் பட்டிருக்கின்றன; அவைகளில் அவர்களது அழகு விளம்பரப்படுத்தப் பட்டிருக்கிறது. அவைகளில் பல ஆபாசமாகக் கூட இருக்கின்றன. அவைகளைப் பார்த்துப் பார்த்து என் மனதில் மிகவும் கெட்ட எண்ணங்கள் உண்டாகின்றன—அம் மாதிரியான கனவுகள் கூடத் தோன்றுகின்றன.] ××× நான் என்ன செய்வேன், மிகவும் குழப்பமடைந்துள்ளேன். என்னைப் போன்றவர் நூற்றுக் கணக்கானவர், ஆயிரக் கணக்கானவர் இருப்பர். அரசாங்கம் இதைப் பற்றி யாதென்றும் செய்ய முடியாதா? கலையின் பெயரால் இம் மாதிரியாக மக்களின் மனது மாசுறுவது தான் அரசாங்கத்துக்குப் பிடித்தமான காரியமா? அந்தச் சினிமா நடிகைகளின் தாய் தந்தையருக்கு அவர்களது பெண்களுடைய காம உணர்ச்சியூட்டும் படங்கள்

தெருத் தெருவாகக் காட்டப்படுவதும், அவர்கள் லக்ஷ கணக்கான ஆண்களின் பாவம் நிறைந்த பார்வைக்கு இலக்காகி, அவர்களது கெட்ட எண்ணங்களுக்குப் பாத்திரர்களாகி, லக்ஷக் கணக்கான யுவர்களின் மனத்தில் ... உண்டாக்கி, பாப இச்சையை ஏற்படுத்தி, அவர்களது விலையுயர்ந்த வாழ்க்கையை வீணுக்குவது கண்டும் தம் பெண்களது செய்கை பால் வெறுப்பு ஏற்படுவதில்லையா? இது பொழுது போக்குச் சாதனமா—அல்லது நமது மனோ நிலையின் வீழ்ச்சிக்கு வழியா? ××× தாங்கள் தயவு கூர்ந்து தெரிவியுங்கள். நான் என்ன செய்யட்டும்? ××××"

இம்மாதிரி இன்னும் பல கடிதங்கள் கிடைத்துள்ளன. சமீபத்தில் ஒரு கல்லூரி மாணவனது கடிதம் ஒன்று கிடைத்துள்ளது. பெரிய அளவில் சுமார் 13½ பக்கங்கள் கொண்டது அது. அதில் திரைப் படத்தால் அந்த வாலிபன் எவ்வாறு வீழ்ச்சியுற்றுன் என்பதைப் பற்றிய மனதை உருக்கும் விவரங்கள் உள்ளன. கடிதத்தில் கண்டுள்ள சம்பவங்கள் மிகவும் அருவருப்பையும் பயத்தையும் உண்டுபண்ணக்கூடியவை—'கல்யாண்' போன்ற பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட முடியாதவை. சம்பவங்களை விட்டுவிட்டு அக்கடிதத்தின் சிற்சில விஷயங்கள் மட்டும் இங்கு தருகிறோம்.

"நான்...கல்லூரியில் படித்துவரும் ஒரு வாலிபன். என் தகப்பனர் மிகவும் ஏழை. ஆனல் நான் அவருக்கு ஒரே புதல்வன், ஆதலால் நான் கல்லூரியில் படிக்க ஏற்பாடு செய்துள்ளார். தகப்பனருக்கு என் பேரில்

இவன் யோக்கியமானவன்' என்ற நம்பிக்கை இருக்கிறது. ஆனால்...நான் ஒரு பெரிய சினிமாப் பித்தன். இந்த சினிமாப் பித்து என்னை மது அருந்தும் பழக்கம் போலப் பிடித்துக் கொண்டுள்ளது. கையில் பணம் இல்லாத போது புத்தகங்களை விற்றுவது நான் இந்த நொடிப் பொழுதுச் சுகத்தை—சினிமா பார்ப்பதை—அடைவதுண்டு. தாய் தகப்பனாரை ஏமாற்றி மறுபடியும் புத்தகங்கள் வாங்கிக் கொள்ளுவேன். தகப்பனார் பாவம், கல்லூரிப் படிப்பு மிகவும் உயர்ந்தது, ஆதலால் புத்கங்கள் அதிகம் தேவைப்படத்தான் செய்யும் என்று எண்ணிக் கொள்ளுவார். ××× என் தந்தை ஒவ்வொரு காசாகச் சேமித்து என்னைப் படிக்கவைக்கிறார். என்னைப்பற்றி அவர் அளவற்ற நம்பிக்கை கொண்டுள்ளார். ஆனால் அந்த எல்லா நம்பிக்கையும் வீணாகப் போகிறது. தாய், தந்தையருக்கு மிகுந்த கிலேசமுண்டாகப் போகிறது! எப்பொழுதும் சுரையா, ராஜ்கபூர் உஷாகிரன், துர்க்கா கோட்டே, பேபி சகுந்தலா, சகுந்தலா, ஆகா, உல்லாஸ், திலீப்குமார் (மொத்தம் 32 பெயர்கள் எழுதியுள்ளன) இம்மாதிரி எத்தனையோ நடிகர் நடிகைகளின் பெயர்களை நான் சொல்லிக் கொண்டேயிருக்கிறேன். இன்று வரை சுமார் 300 திரைப் படங்கள் நான் பார்த்திருக்கிறேன். ××× சினிமா விஞ்ஞானத்தால் கிடைத்துள்ள ஓர் அரிய வஸ்துவாகும். ஆனால் நமது திரைப் படத்துறையினர், கதை தயாரிப்போர், படமமடுப்போர் முதலியவர்கள் அதை மிகவும் கெட்ட முறையில் உபயோகப்படுத்தி வருகிறார்கள் ××× என் தேகம், மனது இரண்டுமே மிகவும் சீர் கேடடைந்து விட்டன. நான் பக்கத்து வீட்டுச் சகோதரியைச் சகோதரி

யாகவும், தாயாரின் சகோதரியை சிற்றன்னையாகவும் கூடக் கருதாத மோசமான நிலைமைக்கு வந்து விட்டேன். (இதன் பிறகு சரீரம் மனது இரண்டும் அடைந்துள்ள சீர் கேட்டைப் பற்றி அருவருப்பான, பயங்கரமான விவரங்கள் உள்ளன) ××× என் படிப்பு முடிந்து விட்டது. நான் மேன்மேலும் சினிமாவுக்கு பலியாகிக் கொண்டு வருகிறேன். (இதன் பிறகு திரைப் படங்களின் பெயர்கள் கொடுத்து அவைகளில் நடிக்கும் நடிகைகளின் அங்க சேஷ்டைகள், காமத்தைத் தூண்டிவிடும் காட்சிகள் முதலியவைகளின் அருவருக்கத் தக்க வருணனைகள் உள்ளன.) ×××

"நம் நாட்டில் தற்போது தயாரிக்கப்படும் படங்களில் நடிகைகளை நிர்வாணமாக்கிக் காண்பிப்பது தான் பாக்கி; மேல் நாட்டுப் படங்களிலோ அதுவும் காண்பிக்கப் பட்டு வருகிறது."

மேற்கொண்டு அந்த வாலிபன் எழுதுவதாவது—"இவை யெல்லாவற்றையும் எழுதுவதின் தாத்பர்யம் என்னவெனில் நம் அரசாங்கம் இவ்விஷயங்களில் ஏன் போதிய கவனம் எடுத்துக் கொள்ளுவதில்லை யென்பதே. இது அரசாங்கத்தின் கடமை அல்லவா? பிலிம் தணிக்கை போர்டு ஏன் இம்மாதிரிப் படங்களுக்கு அனுமதி கொடுக்கிறது? என் போன்ற வாலிபர்கள் மிகவும் சீர்கேடடைந்துள்ளார்கள். எங்களது நாலா பக்கமும் எங்களைத் தீய வழியில் தூண்டும் சக்திகள் நிறம்பியுள்ளன. மனது (புலன்கள்) எங்கள் வசத்திலில்லை, எங்களைக் காப்பாற்று

வோர் யாருமில்லை. இம்மாதிரியான நிலைமை என்னைப் போன்று பலருக்கும் ஏற்பட்டுள்ளது. XXX"

இவ்வாறு தான் திரைப்பட மோஹத்தில் சிக்குண்டு அல்லலுற்றதைப் பற்றி விரிவாக உரைத்துவிட்டு அந்த வாலிபர் மேலும் எழுதுகிறார் :—

"இம்மாதிரி நான் மேலும் சில விஷயங்கள் எழுத விரும்புகிறேன், மன்னிக்கவும். [நம்மிடையேயுள்ள பல எழுத்தாளர்களும் காமத்தைத் தூண்டும் புத்தகங்கள் எழுதுகிறார்கள்] (ஒரு எழுத்தாளருடைய பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது) அவருடைய XXX என்ற புத்தகம் இதற்கு நல்ல உதாரணமாகும். அதில் கண்டுள்ள வர்ணனைகளைப் படிக்கும் பொழுது கட்டாயம் வீரியநாசம் ஏற்பட்டு விடுகிறது.

"நம் போன்ற வாலிபர்களுடைய நாலாபக்கமும் ஏற்பட்டுள்ள விசித்திரமான சூழ்நிலையிலிருந்து விடுதலையடைவது முடியாதெனத் தோன்றுகிறது. ஆகவே, நான் தங்களிடம் இந்த நிலையிலிருந்து விடுபட ஏதாவது வழியுண்டா என்று கேட்டுத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன், தாங்கள் எனக்கு ஆறுதலளிக்கும் வகையில் பதில் எழுதியருளுவீர்களா?

"கல்லூரிகளிலுள்ள உபாத்தியாயர்களும் யாதொன்றும் வழி யுரைப்பதில்லை. சில புரொபஸர்கள் நல்லவர்களாயிருக்கிறார்கள். ஆனால் வெகு சிலரேதான். எங்களுடைய ஒரு உபாத்தியாயர் எல்லா மாணவர்களுடைய முன்னிலையிலும் ஒரு பிரசங்கத்தில் 'ஸ்திரீகள் தன் புருஷன் மூலம்

பிரஜைகள் ஏற்படவில்லையானால் வேறு யாருடனாவது கூடுவது பாவமல்ல' என்று சொன்னார். எம் போன்ற வாலிபர்கள், யுவதிகள் முன்னிலையில் இவ்வாறு உரைப்பது உசிதமா? அவர் மேற் கூறியவாறு உரைத்த பொழுது மாணவர்கள் மாணவிகளின் பக்கம் பார்க்கத் தொடங்கினர். அவர்கள் அவ்வாறு பார்ப்பதன் கருத்து யாதாயிருந்திருக்கக் கூடும்? ××× '' இதன் தொடர்ச்சியாக மேலும் பல வரிகள் எழுதி மிகவும் நம்பிக்கை யிழந்த தொனியோடு அவர் அந்தக் கடிதத்தை முடித்துள்ளார்.

ஒரு உயர்தர அதிகாரியிடம் இவ்விஷயத்தைத் தெரியப் படுத்தியபொழுது அவர், "நீங்கள் சொல்லுவது சரிதான். ஆனால் பொழுது போக்கிற்காக வேறு என்ன ஏற்பாடு செய்வது? பொழுது போக்கிற்காக வேறு ஏதாவது வகை செய்யும் வரையில் சினிமாவை ஒழிப்பது சாத்தியமல்ல'' எனத் தெரிவித்துவிட்டார். விஷயம் முற்றிலும் சரிதான். 'பொழுது போக்கு' பற்றிய விஷயம் தற்காலத்தில் மிகவும் முக்கியத்துவம் அடைந்துள்ளது. பொருளை விரயம் செய்து, ஆசாரங்களை விட்டு, லஜ்ஜை, மானம், மரியாதை எல்லாவற்றையும் உதரித்தள்ளியாவது 'பொழுது போக்கு' அனுபவிக்க வேண்டும்! இம்மாதிரியான பொழுது போக்கு ஓர் நவீன காலத்துப் பிணியாகும். ஆனால் இப்பிணி அதிகமாகப் பரவியுள்ளது. மிக உயர்ந்த ரகமான பிணியல்லவா இது! ஆதலால் அந்த உத்தியோகஸ்தர் சொன்னது முற்றிலும் சரியே. வாஸ்தவத்தில் நம் வாலிபர்கள், யுவதிகளிடையே

சினிமாப் பார்க்கும் பழக்கம் மிகத் தீவிரமாகப் பரவி யுள்ளது; ஒருக்கால் அரசாங்கம் சினிமாத் தொழிலே மூடிவிட நினைத்தால் கூட பெரும் எதிர்ப்பும் அமளியும் ஏற் பட்டுவிடும், நிலைமையைச் சமாளிப்பது கூடச் சிரமமாகி விடும். இவை யெல்லாம் உண்மையாயிருந்த போதிலும் கூட, இந்த சினிமாப் பழக்கத்தை பொழுது போக்குச் சாதனத்தின் பெயரால் இதே மாதிரி மேன் மேலும் வளர விட்டு, நம் வாலிப சமூகத்தினர் மிகவும் மோசமாக இத் தீய பழக்கத்துக்கு இலக்காகி வாழ்வை வீணுக்கிக் கொள் வதையும், நம் நாட்டின் வருங்காலம் இருள் சூழ்ந்ததாக ஆகிவருவதையும் அனுமதித்துக் கொண்டிருக்க முடியுமா? இந்தப் பிரச்சினையைப் பற்றி மிகவும் தீவிரமாக ஆலோ சித்தேயாக வேண்டும்.

சில வருஷங்களுக்கு முன்பு ஏதோ ஒரு தமிழ் சஞ்சி கையின் ஆசிரியருக்கு யாரோ ஒரு சினிமா நக்ஷத்திரத் தைப் பற்றி ஆபாசமான விஷயப் பிரசுரித்ததற்காகத் தண்டனை கொடுக்கும் போது சென்னை முதல் பிரசி டென்ஸி மாஜிஸ்டிரேட் கூறியதாவது:—

"ஆபாசத்தைப் பரப்புவதில் திரைப்பட ஸ்தாபனத் தோடு இந்த நபரை ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது இந்த நபரின் குற்றம் மேற்படி ஸ்தாபனத்தின் குற்றத்தை விட மிகவும் சாதாரணமானதாகவே கருதப்பட வேண் டும். சினிமாத் தொழில் தற்கால யுகத்தில் ஒரு பெரிய சாபக் கேடாகும். அது மனித குலத்தின் எண்ணற்ற நங்கைகளை நாட்டியமாடும் வேசிகளாகவும், வாலிபர்களை நட்டுவர்களாகவும் ஆக்கி, அவர்களை வெட்கமற்றவர்

களாகவும், மதிப்பிற்குறிய குணங்களே இல்லாதவர்களாகவும் ஆக்கியுள்ளது. சினிமாவினுல் கல்வி, நீதி முதலியன புகட்டக் கூடிய லாபங்களும் ஏற்படக் கூடுமென்பதாகக் கூறப்படுகிறது. ஆனுல் இக்கூற்று இத்தொழிலின் பயங்கரமான தன்மையை மறைப்பதற்காகவே கூறப்படுவதாகும். சினிமா நடத்துபவர்களுக்கு சமூக அல்லது நீதி சம்பந்தமான சீர்திருத்தங்களேப் பற்றிக் கவலேயே கிடையாது. அவர்களது எல்லா நோக்கமும் பணம் சம்பாதிப்பது ஒன்றேயாகும்."

மேற்படி மாஜிஸ்டிரேட் சொன்ன ஒவ்வொரு சொல்லும் மனதில் இருத்திக்கொள்ள வேண்டியதாகும்; மேலும், இதைப்பற்றி நாம் கவனக் குறைவாக இருந்தால் சமூகம் மிகவும் சீர் கேடடைந்துவிடும் என்பதை அறிவுறுத்துவதாகும்.

படங்களில் சில நல்லவையாகவும் இருக்கக்கூடும். படமெடுப்போர் சமூக நலனேயே மனதில் வைத்துக்கொண்டு இத்தொழிலே நல்ல முறையில் பயன் படுத்தினுல் கட்டாயம் சமூகத்துக்கு ஓரளவு நன்மை ஏற்படக்கூடும்! சினிமாக்களில் நடிகைகளே இல்லாமலிருந்து, ஆண்களே நடிகைகளுடைய பாகங்களேயும் ஏற்று நடித்து, அதோடு, யாதொரு விதத்திலும் ஒழுக்கத்தவறு ஏற்படுத்தக் கூடிய காட்சிகளோ, பாட்டுக்களோ அல்லது சம்பாஷணைகளோ இல்லாமலிருந்தால் சினிமாவினுல் யாதொரு தீங்கும் ஏற்படாது; ஆனுல் இம்மாதிரி தற்சமயம் நடைபெறுவது சாத்தியமில்லே. பொது ஜனங்கள்—'இப்படிப்பட்ட சினிமாவில் யாதொரு கவர்ச்சியும் இருக்காது' எனக்கூறு

வார்கள். இதுவும் சரியே. இம்மாதிரி வீழ்ச்சியின் படுகுழியில் தள்ளும் அக்கவர்ச்சியையே நீக்கவேண்டும்; அப்படியானல் தான் இதனல் சமூக நலன் ஏற்படக் கூடும்; ஆனல் பணத்தையும் அழகையும் கண்டு கவர்ச்சியுற்ற ஜனங்கள்—படம் பார்ப்போர், தணிக்கையாளர் யாரும் இதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அவர்கள் இதை 'பொழுது போக்கு' என்றே சொல்வார்கள், இதனல் ஏற்படும் பற்பல நன்மைகளைப் பற்றிப் பொது ஜனங்களிடம் பேசித் தனது சுயநலத்தைப் பூர்த்தி செய்து கொள்ளுவார்கள்.

சினிமாவினல் ஜனங்கள் திருட்டுத் தொழிலில் புதுப் புது முறைகள் கற்றனர், மது அருந்தக் கற்றனர்; வெட்கமற்ற செயல்கள் புரியவும், அருவருக்கத் தக்க வியபிசாரங்கள் செய்யவும் கற்றனர். சினிமாப் பார்ப்பதனல் நம் வாலிபர்கள், யுவதிகளிடையே தன் போக்குப்படி திரியும் மனப்பான்மை பெருகி வருகிறது என்பதற்கும் போதிய சான்றுகள் நம் முன் இருக்கின்றன. எண்ணற்ற இளம் ஆண் பெண்கள் இந்த மனப் பான்மையினல் விழ்ச்சியடைந்துள்ளனர். இருந்த போதிலும், நாம் இதைப் 'பொழுது போக்குச் சாதனம்' என்ற பெயரால் அழைக்கிறேம்! சமீபத்தில் நாகபுரியிலிருந்து வெளிவரும் 'யுகதர்ம' என்ற பத்திரிகையில் ஸ்ரீ கோவிந்த ஸ்ரீவாஸ்தவ் என்பவர் இவ்விஷயத்தைப் பற்றிய ஓர் கட்டுரையில் கீழ்க் கண்டவாறு தெரிவித்துள்ளார்:—

"சினிமாவானது வெறும் பொழுது போக்குச் சாதனமென்றும் மனதுக்குப் புத்துயிரளிக்கக் கூடிய

சாதனமென்றும் கருதுபவர்கள் ஓரளவுக்குத் தவறு செய்கிறார்கள். எதன் பிரபாவம் சிறுவர்கள், வாலிபர்கள் மனதில் முற்றிலும் பதிந்து விடுகிறதோ அதை வெறும் பொழுது போக்குச் சாதனமாகக் கருதுவது புத்திசாலித்தனமாகாது. ஏதாவதொரு காரியம் ஒரு வாழ்க்கையையே முற்றிலும் பிரபாவப் படுத்த முடியுமானால் அப்பொழுது அது வெறும் பொழுது போக்குச் சாதனமாக மட்டும் இராமல் பண்பாகவே மாறி விடுகிறது. பொழுது போக்கு ஒரு சிறிதளவு காலத்துக்கு நீடிக்கலாம், பிறகு மறந்துவிடப்படுகிறது. அது நீண்ட காலத்துக்கு ஸ்திரமாக மனதில் பிரபாவம் ஏற்படுத்த முடியாது. தினந்தோறும் சாப்பிட்டுவரும் சாதாரண உணவை மாற்றி, ருசி மாற்றத்துக்காக ஏதாவதொரு நாள் இனிப்புப் பண் சாப்பிடலாம். சினிமா பொழுது போக்குச் சாதனமாக மட்டும் கருதப்பட்டுவந்த காலம் இருந்திருக்கலாம். ஆனால் இன்று அதன் பிரபாவம் எங்கும் நன்கு காணப்படுகிறது. இன்று சினிமா வாழ்க்கையில் ஓர் பழக்க வழக்கத்தையே நிர்மாணித்துவிடும் நிரந்தரத் தன்மை வாய்ந்த கவர்ச்சிகரமான விஷயமாகியுள்ளது. தாய் தந்தையர் தம் குழந்தைகளுக்கோ, உபாத்தியாயர்கள் தம் மாணவர்களுக்கோ புகட்ட முடியாத படிப்பினையும் பழக்க வழக்கங்களும் இந்த நிழல்ப்பட, வர்ணப்பட உலகம் சிறிதளவு நேரத்திலேயே ஏற்படுத்தி விடுகிறது. அவர்களும் அதே மாதிரியானதோர் உலகத்தில் சஞ்சரிக்கத் தொடங்குகிறார்கள். ஏன் இப்படி நேரிடுகிறது? இதன் அடிப்படையான காரணத்தை ஆராய்ந்தறிவது அவசியமாகும்.

"இன்று உலகித்தில் மூன்றே மூன்று விஷயங்களி டையே போட்டி இருந்து வருகிறது—அழகு, பணம், ஆதிக்கம். இம்மூன்று பிரச்சினைகளும் உலகத்தின் எல்லா நாடுகளிடையேயும் உள்ளன. ஆனால் நம் பாரத நாடு யாருடைய புண்ணிய வசத்தாலோ இந்த அழகு, பணம், ஆதிக்கம் ஆகிய போட்டியில் அதிகம் ஈடு படவில்லை, மிகவும் பின் தங்கியுள்ளது. பாரத நாடு ஆதிமுதலேயே ஆத்மவிசாரணை நிறைந்த நாடாகும். அது அன்ன ஆகாரம், 'பால் உணர்ச்சி' ஆகிய விஷயங்களைக் காட்டி லும் மதம், பண்பாடு ஆகியவைகளுக்கு முதலிடம் அளித் துள்ளது. இந்திய மக்கள் பிரகிருதி அல்லது மாயையின் சக்தியைக் காட்டிலும் பெரிய அகண்டஜோதியான பரப் பிரும்மத்தினிடம் அதிக நம்பிக்கை, சிரத்தை வைத்துள்ள வர்கள். ஆனால் இன்று நம் நாட்டில் அதே மாயையின் பிரபாவம்தான் எங்கும் பரவியிருக்கக் காண்கிறோம்.

உலக முழுவதிலும் எங்கும் யதார்த்தவாதக் கொள் கைகளிடையே போட்டி நிலவியிருக்கும் சந்தர்ப்பத்தில் இந்தியாவிலோ ஆதர்ச வாதம், யதார்த்த வாதம் இரண் டிற்கும் மோதல் ஏற்பட்டுள்ளது. மிகவும் கூர்ந்து கவனிக் குங்கால், சினிமாக்கலையில் மட்டுமில்லாமல் சமூக, அர சியல் துறைகளில் கூட ஆதர்சம் யதார்த்தம் இரண்டிற் கும் மோதல் இருந்துவருவது புலப்படும். இந்தியாவிலுள்ள எல்லா இடது சாரிக்கட்சிகளும் தீவிர யதார்த்தவாதிகள், மதம், பண்பாடு, நடத்தை, ஆதர்சம் ஆகியவற்றைக் கேவல மாகக் கருதுகின்றனர். வலதுசாரிக் கக்ஷிகளில் பெரும் பாலோர் ஆதர்ச வாதிகள். அவர்கள் நாகரிகம், பண்

பாடு, மதம் இவைகளைக் காப்பாற்றுவதில் அக்கரை கொண்டுள்ளவர்கள். காங்கிரஸ் எப்பக்கம் நோக்கங் கொண்டுள்ளதோ சொல்வதற்கில்லை. காந்தீயக்காங்கிரஸ் ஆத்மீக மனப்பான்மை உள்ளதாயிருந்தது. இன்றைய காங்கிரஸ் ஆதர்சம், யதார்த்தம் இரண்டிற்கும் நடுவில் இருந்து வருகிறது. ஆகையால்தான் இன்றைய அரசியல் அரங்கில் அதற்கு வலதுகட்சி, இடதுகட்சி இரண்டினிடமிருந்துமே ஒத்துழைப்புக் கிடைக்கமுடியவில்லை.

"சினிமாத் தொழிலின் நிலைமை இதுதான். புராதன காலத்திலிருந்து நடந்து வந்திருக்கும் ஆதர்சம் பொருந்திய பழக்க வழக்கங்களை பழைய வழக்கங்கள், மிக்க ஆடம்பரம் பொருந்தியவை எனச் சொல்லிப் பல திரைப் படங்களில் அவைகளின் மீது தீவிரத் தாக்குதல் நடைபெறுகிறது. இவை யெல்லாம் கலையின் பெயரால் நடைபெறுகின்றன. ஒவ்வொரு திரைப் படத்திலும் இவ்வுலகத்து (material) அழகையும் உடலழகையும் பற்றி பற்பல விதங் வர்ணனைகள் காணப்படுகிறன. ஒருக்கால் இன்றையக் கலைஞன் இதை எடுத்துக் காட்டுவதில்தான் முனைந்திருக்கிறான் போலும். ஆனால் இது 'பால் உணர்ச்சி' யைப்பற்றிய பிரச்சினையைச் சரியான முறையில் தீர்ப்பதாகாது. இன்றைய பற்பல நடிகைகள் விவாஹமாகாதவர்கள். விவாஹம் உடலழகு அதிகரிப்பதில் தடை ஏற்படுத்துவதாகக் கருதப்படுகிறதா என்ன? அல்லது உடலழகு என்பது அழியாத, குன்றாத தன்மை வாய்ந்ததா? ஒருக்கால் இந்தக் கலைஞர்களின், நடிகைகளின் எண்ணம் சமூகக் கட்டுப்பாடுகளை உதறித்தள்ளியதேச்

சையாக வாழ்ந்துவருவது தான் சுகம் பொருந்திய வாழ்க்கைக்கு அத்தாட்சி என்பதாயிருக்கலாம்!

ஒவ்வொரு படத்திலும் இந்திரியத் தத்துவங்களைக் கிளறிவிடும் அடக்க முடியாத காம உணர்ச்சி பொருந்திய விஷயங்கள் நிறைந்திருக்கின்றன. படம் பார்ப்போர் இந்த உணர்ச்சிகளுக்கு நன்கு இலக்காகிறார்கள். அவர்கள் இதைப் 'பொழுதுபோக்கு' என்று சொல்லித் தட்டிக் கழித்து விடுவதில்லை.'

"இதைப் 'பொழுது போக்கு' என்று சொல்லிக் கொள்ளுவது தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்ளுவதாகும். இந்த மாதிரியான, புலன்களை அடக்க முடியாத காம உணர்ச்சிதான் எல்லா துக்கங்களுக்கும் கோபத்துக்கும் அடிப்படையாக இருந்துவருகிறது. இதன் பலன் என்ன வென்றால், சினிமாக் கலைஞன் மிகவும் சிரமப்பட்டுத் தயாரித்த படம் பெரும்பாலான சினிமாப் பார்ப்போருக்கும் காம உணர்ச்சி ஊட்டுவதாகவே முடிகிறது. பாமர ஜனங்கள் படங்களில் சாரமான பாகத்தை மட்டும் ஏற்றுக் கொண்டு அர்த்தமற்ற பாகங்களைக் கவனியாது விட்டுவிடும் அளவுக்கு புத்திசாலிகள் அல்ல. அவர்கள் எங்கு பகட்டான, உணர்ச்சி நிறைந்த படத்தைக் கண்டாலும் அதில் அளவுகடந்த பிரியம் கொண்டுவிடுகிறார்கள். நன்கு படித்த ஜனங்கள் கூட இம்மாதிரித் தான் நடந்து கொள்கிறார்கள். கலைஞர்களின் எல்லா உழைப்பும், எல்லா சக்தியும் படம் பார்ப்போரின் காம உணர்ச்சியைத் தூண்டுவதற்கே ஒரு விளையாட்டுக் கருவியாக உபயோகப்படுகிறது!"

சினிமாவானது நமது தினசரி வாழ்க்கையையும் மிகவும் மோசகாக பாதிக்கிறது. உடுக்கும் உடைகளில் கூட நம் வாலிபர்களும் யுவதிகளும் சினிமா நடிகர்கள் நடிகைகளது உடையையே பின்பற்றத்தக்கதாகக் கருதத் தொடங்கியுள்ளனர். சமீபத்தில் 'சன்மார்க்கம்' என்ற பத்திரிகையின் ஓர் பிரதிநிதி எழுதியிருந்ததாவது—

"சினிமாவின் பிரேமை நம் நாட்டு வாலிபர்கள், யுவதிகளின் மனதில் எவ்வாறு குடி கொண்டுள்ளது, அவர்களது விருப்பங்களை எவ்வாறு உருவாக்கியுள்ளது என்பதைக் கண்கூடாகக் காணவேண்டுமானல் கடைத் தெருவிலுள்ள துணிக் கடைகளில் காணலாம். யுவர்களின் இந்த மாதிரி மனப்பான்மையைக் கண்டு வியப்பே ஏற்படுகிறது, இதை நம்பக்கூட முடியவில்லை."

வாலிபர்கள், யுவதிகளுடைய விருப்பங்களை உருவாக்கிவரும் பணி சினிமா உலகத்து நக்ஷத்திரங்களுக்கு வெகு காலமாகவே கிட்டியுள்ளது! சினிமா உலகத்து நடிகைகளின் புடவைகள், ப்ளவுஸ்கள் இவைகளின் மோஸ்தர்களையே நாகரிக நாரீமணிகள் பின் பற்றத் தொடங்கிவிட்டனர். சினிமாப் பிரியர்களில் சிலர் சினிமா நடிகர் நடிகைகளின் உடை, நகை அலங்காரங்களைக் கண்டு பின்பற்றும் நோக்கத்துடனேயே சினிமாப் பார்க்கச் செல்லுகின்றனர். பல வாலிபர்கள் ராஜ்கபூர், திலீப்குமார், தேவானந்த் இவர்களையே வாழ்க்கையில் வழிகாட்டிகளாக ஏற்றுக் கொண்டுள்ளனர். பல வாலிபர்கள் திலீப்குமாரின் விசித்திரமான சிகையலங்காரத்தை

யும் ராஜ்கபூரின் 'பர்ஸாத்' நிஜாரையும் கூடப் பின்பற்றத் தொடங்கியுள்ளனர்!

நல்ல மோஸ்தர் விரும்பும் நாரீமணிகள் கூட அணிய வெட்கப்படும் துணி ரகங்களை அணிந்துகொண்டு நம் வாலிபர்கள் மார்பு நிமிர்ந்து நடந்து செல்கின்றனர்! இது சினிமாவின் பிரசாதம்! இப்பொழுதெல்லாம் தலையணை உரை, படுதாத்துணி போன்ற துணிகளைக் கொண்டு 'புஷ் ஷர்ட்' தைத்துக்கொள்ளும் பாஷன் தீவிரமாகப் பரவி வருகிறது. இதுமட்டுமல்ல, 'ஆவாரா', புஷ் ஷர்ட், 'பர்ஸாத்' புஷ் ஷர்ட் என்ற பெயராலேயே உடைகள் வழங்கப்படத் தொடங்கியுள்ளன. இந்தத் துணிகளின் பேரில் 'ஆவாரா', 'பர்ஸாத்' படக்காசிகள் அச்சிட்ப்பட்டிருக்கின்றன. இம்மாதிரி, சினிமாப் படங்களுக்கு விளம்பரப் பலகைகள் போன்று தம் உடைகளின் பேரில் அப்படங்களைத் தாங்கிச் செல்லும் யுவர்களின் வருங்காலம் எவ்வாறு இருக்கும் என்று ஊகித்துக் கொள்ளலாம். யுவதிகளும் தாம் மிகவும் விரும்பும் நடிகைகள் உபயோகித்துவரும் புடவைகள், ப்ளவுஸ்களை அணிவதையே விரும்புகிறார்கள். ×××× எந்த நவநாகரிகத் துணிக் கடைக்குச் சென்று விசாரித்தாலும் சினிமா நக்ஷத்திரங்ள் பெயரால் துணி ரகங்கள் தயாரிக்கப்பட்டு வருவது தெரியவரும். 'மதுபாலா' துணிகள் 2½ ரூபாய், 'நர்கிஸ்' துணி மூன்று ரூபாய், 'சுரையா' துணி 1½ ரூபாய் என இவ்வாறு விற்கப்படுகிறது, பங்களூரில் தயாராகும் நக்ஷத்திரம் அமைந்த ஓர் துணி மதுபாலாத்துணி எனப்படுகிறது; மைசூரில் தயாராகும் சாதாரண ரகமான, ஜரிகைக்கரை

அமைந்த துணிக்கு நர்கிஸ் துணி எனப்பெயர். கருப்பு, லினனில் பஞ்சள், பச்சை, சிவப்பு நீண்ட கோடுகள் அமைந்த துணிக்கு சுரையாத் துணி எனப் பெயர்!

ஒரு பஞ்சாபித்துணி வியாபாரி, சினிமா நக்ஷத்திரங் களின் பெயரால் துணிகள் தயாரித்தால் வெகு சீக்கிரம் விற்பனை ஆவதாகக் கூறினர். இம்மாதிரியாக, இந்நாட் களில் சினிமா நட்சத்திரங்கள் சினிமாப்படம் மட்டு மல்லாமல் துணிகளும்கூட விற்கத் தொடங்கியுள்ளார்கள்! நம்மை யறியாமலே இந்த நக்ஷத்திரங்கள் நமது சமூக வாழ்க்கையின் தலைவிதியை விலை பேசி வருகிறார்கள்.

நம் தேசீயத் தலைவர்கள் நமது பண்பு நிறைந்த வாழ்க்கையின் அணிகலனாக ஆக்க விரும்பிவரும் இந்த பிலிம் தொழிலானது நமது மன விருப்பங்களில் எவ்வாறு கிளர்ச்சி உண்டு பண்ணியுள்ளது என்பது மேலே கண் டுள்ள வர்ணனைகளிலிருந்து நன்கு தெரியவரும். இதே நிலை நீடிக்குமானல் வருங்காலத்தில் மிகுந்த சீர் குலை வும் சமூக நலனுக்கு எதிரான புரட்சி மனப்பான்மை யுமே அதிகம் காணப்படும். இந்த நற்சுவையற்ற 'பாஷன் பித்து' நம் வாலிபர் சமூகத்தை எத்திசையில் இட்டுச் செல்லுமோ தெரியாது.

இதிலிருந்து சினிமாவின் பிரபாவம் எவ்வளவு ஆழப் பதிந்துள்ளது என்பது தெரியவருகிறது. நமது மனப் போக்குகளும் எவ்வாறு கேடடைந்து வருகிறது என்பதும் புலனாகிறது. மானிடனின் மனப் போக்கு மாறுதலடைந்து, அவனது புத்தி கெட்டதை நல்லதாகக் கருதத் தொடங்கு மானல் கெட்டதிலிருந்து விடுபடுவதென்பதே மிகவும்

சிரமமாகி விடும். இதற்கு பிரத்தியக்ஷமான சான்றுகள் பல உள்ளன. சிறிது காலத்துக்கு முன்பு வரை நமது மதிப்பு வாய்ந்த குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் தனது அழகையும், உருவத்தையும் காண்பிப்பது கொடிய பாவமெனக் கருதி வந்தார்கள். அவர்களது அழகை வெளியில் காண்பிப்பது அவர்களது சீலத்தையே அவமதிப்பதாகும். இது அவர்களுக்குப் பிடிக்காமலிருந்தது. ஆனால் இன்றோ அதே நாரிகளின் மனதில் தம் அழகைப் படங்களின் மூலம் விளம்பரப் படுத்திக் கொள்ள வேண்டும் என்ற கீழ்த்தரமான, அருவருக்கத் தக்க எண்ணம் உதித்துள்ளது. (இப்பொழுது நம் நாட்டில் கூட துர்ப்பாக்கிய வசமாக அழகுப் போட்டியும் ஆரம்பமாகி விட்டது. அதில் நமது குலப் பெண்கள் வேறு ஆடவர்கள் மூலம் தம் அழகை அளவிடச் செய்து மதிப்புப் பெறத் தொடங்கியுள்ளனர்!) ஆடவர்களோடு கூட உலாவுவதிலும் பல்வேறு அங்க சேஷ்டைகள் மூலம் தன் சீலத்தைக் கேலிக்குள்ளாக்குவதிலும் அவர்கள் பெருமையே கொள்ளுகிறார்கள்! அவர்களுடைக தாய் தந்தையர்கள் தன்னலம் (சுய நலம்), பேராசை, அறிவீனம், இவைகளால் தூண்டப் பெற்றுத் தம் குலத்துதித்த பெண்களை சினிமா நடிகைகளாக்கி எவ்வளவு பெரிய பாவச் செயல் புரிகின்றார்கள் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். தம் சிறிய, இளம் புத்திபடைத்த குழந்தைகளை சினிமா பார்க்க அழைத்துச் சென்று அவர்களிடம் சினிமா பார்க்கும் தீய வழக்கத்தை அதிகம் வளர்த்து, அவர்களது வாழ்க்கை பாழாவதற்குத் தாமே காரணமாயிருந்து வரும் பெற்றோர்களின் புத்தியின்மையைக் கண்டு இரக்கமே உண்டா

கிறது. இந்தப் பயங்கரமான, அழிவென்னும் தீக் குழியில் தம் குழந்தைகளை சிரித்த வண்ணமே தள்ளும் இந்தத் தாய் தந்தையரின் புத்தியை என்னவென்று உரைப்பது!

சில ஜனங்கள் மதசம்பந்தமான படங்கள் பார்ப்பதில் ஆட்சேபம் என்ன இருக்கக் கூடும் எனக் கேட்கிறார்கள். ஆட்சேபம் என்னவென்றால் 'கிழவன் செத்தது ஒன்றும் பெரிய விஷயமல்ல, ஆனால் சாவானது நம் வீட்டைத் தெரிந்து கொண்டு போய்விட்டதே' என்பது தான் சினிமா பார்க்கும் வழக்கம் ஏற்பட்டுவிட்டால் பிறகு மத சம்பந்தமான படம், மதக் கொள்கையற்ற படம் என்ற வித்தியாசங்களை யார் கவனிக்கப் போகிறார்கள்? ஒரு தடவை உணர்ச்சியூட்டும் படத்தைப் பார்த்துவிட்டால் பிறகு அதே மாதிரி அபிநயங்கள் உள்ள படங்கள் பார்க்க மனது ஆவல் கொள்ளுகிறது. இதன் காரணம் மிகத் தெளிவானது—கெடுதல்கள் எவ்வளவு சீக்கிரம் மனதில் பதிகின்றனவோ அவ்வளவு சீக்கிரம் நல்லவை பதிவதில்லை. மேலும், சினிமாக்களில் பல பெண்கள், பருவப் பெண்கள் நடிப்பதால் மதசம்பந்தமான கதைகளின் பாகங்களை ஏற்று நடித்தாலும், பார்ப்போர் மனதில் களங்கத்தையே உண்டுபண்ணுகிறார்கள். ஆகவே எந்தப்படமும் மதசம்பந்தமான படமென நன்மதிப்புப் பெற்றுவிடமுடியாது. "மற்றொரு கெடுதலும் இதில் உள்ளது—நம் வாலிபர்களுடைய மனது சினிமா நடிகைகளை நாடுவது போல நம் வீட்டுப் பெண்களின் மனதுகூட சினிமா நடிகர்களது அழகு, உடையலங்காரம் முதலியவற்றைக்கண்டு மோகம் கொள்ளுகிறது—குறைந்த பக்ஷம்

இவர்கள் மாதிரி நடையுடைபாவனையுடன் கூடியவர்களாக நமது கணவன்மார் இருக்கக் கூடாதா என நினைக்கிறார்கள். இது நன்கு அறிந்துகொண்டே விஷம் கலந்த லட்டுத் தின்பது போலவாகும், அல்லது சுவர்க்கம் என ஏமாந்து நரகக்குழியில் விழுதற்கொப்பான செயலாகும். இந்தச் சினிமா மோகம் வாஸ்தவத்தில் மிகவும் சோகம் நிறைந்த செயலாக முடியும்.

கடைசியில் நாங்கள் யாவரையும் வெகு வணக்கமாகக் கேட்டுக் கொள்ளுவது யாதெனில், 'பொழுது போக்கு' என்ற கவர்ச்சியின் வசப்பட்டு ஒருவரும் சினிமா பார்க்கவேண்டாம், அது எப்படிப்பட்ட படமாயிருந்தாலும் சரி, அதன்மூலம் கட்டாயம் கெடுதி விளையும். மிகவும் தீர யோசனை செய்த பிறகே இம்மாதிரி வேண்டுகோள்—இவ்வுலகிலும் மேலுலகிலும் நன்மை பெறவிரும்புவோர், ஆடவர் பெண்டிர் எவருமே சினிமா பார்க்க வேண்டாம், தம் குழந்தைகளையும் சினிமா பார்க்க அனுமதிக்க வேண்டாம் என்ற வேண்டுகோள்—விடுக்கப்பட்டிருக்கிறது. நாம் நற்கதியடைய விரும்புவோமானால் சினிமா அதற்குப் பெரிதும் இடையூறு விளைவிப்பதாகும்.

சமீபத்தில், 1952ம் வருஷம் ஏப்ரல் மாதத்தில், குழந்தைகளுக்கான செய்திப் பத்திரிகை, ரேடியோ, சினிமா, இவைகளைப்பற்றி ஆலோசிக்கும்பொருட்டு 'யூனெஸ்கோ'வின் ஒரு மஹாநாடு நடந்தது. அதில் பல விஞ்ஞானிகள், பார்லிமெண்ட மெம்பர்கள், நிபுணர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். பிரிட்டன், இந்தியா, ஸ்வீடன்,

ஜெர்மனி, ஹாலெந்து, பிரான்சு, ஸ்விட்ஜர்லந்து, ஸ்பெயின், அமெரிக்கா முதலிய 24 நாடுகள் இதில் கலந்துகொண்டன. இதில் கீழ்க்கண்டவாறு தீர்மானம் நிறைவேறியது—"சினிமாப் படங்களின் விஷயங்களைப்பற்றி ஆலோசிக்க மற்றொரு சர்வதேசீயக் கமிட்டிக்கு ஏற்பாடு செய்யப்படவேண்டும். இந்தக் கமிட்டியின் கிளைகள் 'யூனெஸ்கோ' வில் சேர்ந்த எல்லா நாடுகளிலும் இருப்பதாயிருக்க வேண்டும். இந்தக் கமிட்டி சினிமாப் படங்களைப் பரிசீலித்து, அவைகளில் குழந்தைகளுக்கும் யுவர் யுவதிகளுக்கும் காண்பிக்கப்படத் தகுந்தவை எவை, தகாதவை எவை என்பதைப்பற்றிச் சிபார்சு செய்யவேண்டும்."

இதிலிருந்து ஒரு விஷயம் அவசியம் தெளிவாகிறது; அதாவது, சினிமாவினால் குழந்தைகளும் யுவர்களும் விரும்பத்தகாத விஷயங்கள் கற்றுக்கொள்கிறார்கள் என்பதே. ஆனால், விரும்பத்தகாத விஷயங்கள் என்றால் அவை எல்லோருக்குமே விரும்பத்தகாத விஷயங்கள்தான். மேலும், சினிமா பார்க்கும்பொழுது பெரும்பாலும் தாய்தந்தையரும் குழந்தைகளும் சேர்ந்தே பார்க்கிறார்கள். ஆகையால் எந்த விஷயத்தால் மனதில் கெட்ட பலன் ஏற்படக்கூடுமோ, எந்த விஷயத்தைத் தாய் தந்தையர் தம் குழந்தைகள் முன்னிலையில் படிக்க முடியாதோ, வைக்கமுடியாதோ அப்படிப்பட்ட யாதொரு விஷயமும் எந்த நாடகத்திலும் நடிக்கப்படக்கூடாது, சினிமாவில் காண்பிக்கப் படக்கூடாது; அதில் வெளிப்பகட்டு, அழகின் மூலம் கவர்ச்சித்தல், மற்ற கெட்ட எண்ணங்களைத் தூண்டும் விஷயங்கள் இல்லாதிருந்தால் தான் காண்பிக்கப் படலாம். நிற்க,

நாம் இவ்வளவு தூரம் எடுத்துரைத்த பின்பும் கூட நாம் கூறுவது சினிமா உலகத்தை யாதொரு விதத்திலும் பாதிக்காது, அரசாங்கம் இதற்குச் சற்றும் அசைந்து கொடுக்காது, அல்லது சினிமாவைப் 'பொழுது போக்கு' எனக் கருதும் சினிமாப் பித்தர்களான ஆடவர் பெண்டிரும் சற்றும் தம் கருத்தை மாற்றிக் கொள்ளமாட்டார்கள் என்பது தெரிந்த விஷயம்தான். இருந்தபோதிலும், இதைப் படிக்கும் எல்லா நபர்களேயும் நாம் நமது 'கல்யாண் குழுவின்' அங்கத்தினர்களாகப் பாவித்துக் கொண்டு நாம் அவர்களிடம் மேலும் மேலும் வேண்டிக்கொள்ள விரும்புவது என்னவென்ருல், அவர்கள் தம்மால் முடிந்த மட்டில் சினிமா பார்ப்பதை முற்றிலும் விட்டுவிடவேண்டும். இதைப் படிப்போரில் பெருவாரியான நண்பர்கள் எமது வேண்டுகோளுக்கு அவசியம் செவி சாய்ப்பார்கள் என்றே நம்புகிருேம்.

கூடவே, தணிக்கைபோர்டு நிர்வாகிகளிடமும் நாங்கள் தாழ்வுடன் வேண்டிக்கொள்வது யாதெனில், அவர்கள் கூடியமட்டில் நல்ல பாதையிலிருந்து வழுவச்செய்யக் கூடிய, மனதில் களங்கம் விளேவிக்கக் கூடிய காட்சிகள், பாட்டுக்கள், சம்பாஷணைகள் நிறைந்த படங்களேயும், நடிகைகளின் அருவருக்கத் தக்க அங்கசேஷ்டைகள் நிறைந்ததும், எச் சார்பினருடைய மத சம்பந்தமான கொள்கைகளேயும் பாதிக்கும் வகையில் அமைந்துள்ளதுமான படங்களே ஒருபொழுதும் திரையிடுவதற்கு அனுமதியளிக்க வேண்டாம்.

சினிமாவைப் பற்றிப் பெரியோர் சொல்வதென்ன ?

ஆசார்ய விநோபா பாவே அவர்கள்

(1)

×××× பிலிம் தயாரிக்காமலிருக்கும் பொருட்டு அவர்கள் பேரில் கட்டுப்பாடு விதிக்க வேண்டும். அப்படங்கள் சமூகத்தின், பொது மச்களின் புத்தியை மாசுபடுத்துகின்றன, நல்ல ருசியுள்ள இலக்கியங்களை மக்கள் விரும்புவதைக் கூடக் குறைத்து விடுகின்றன.

நாம் நமது வாலிபர்கள் சரியான பாதையில் செல்வதை விரும்புவோமானல், அவர்கள் நோயற்று, நன்னடத்தையுடன் கூடிய வீர புருஷர்களாக இருக்கவேண்டுமென்று விரும்புவோமானல், நாம் அவர்களுக்குப் பொழுது போக்கோடு கூடவே நல்ல படிப்பினையும் அளிக்கவல்ல சாதனங்களைத் தேடவேண்டும்.

எல்லா உண்மையான இலக்கிய கர்த்தாக்களும் சினிமாவினல் நாளுக்கு நாள் அதிகரித்துவரும் தீங்கைக் கண்டு கவலையுறத் தொடங்கியுள்ளார்கள். முன் காலத்தின் ஜனங்கள் பகல் முழுவதும் உழைத்த பிறகு பஜனை, சங்கீர்த்தனம் முதலியவைகளில் ஈடுபட்டுவந்தனர். கடவுளின் பெயரை ஸ்மரித்துக் கொண்டே நித்திரைக்குச் செல்வார்கள். இதனல் அவர்கள் என்றும் நல்ல எண்ணங்கள் படைத்தவர்களாக இருந்துவந்ததில் ஆச்சரியம் யாதுமில்லை. சினிமாவின் பிரபாவமோ இதற்கு நேர் எதிரிடையானதாக இருக்கிறது !

(2)

××××நாட்டு விடுதலைக்குப் பிறகு நாம் நமது நடத்தையில் கவனக்குறைவு கொள்ளத் தொடங்குவோமானால் அது நாம் அடைந்த சுதந்திரத்தை இழந்துவிட ஆரம்பிக்கும் ஓர் செயலாகவே கருதப்பட வேண்டும்.

* * * *

ஒவ்வொரு நாள் மாலையிலும் சுமார் 20 லட்சம் ஜனங்கள் சினிமா பார்க்கச் செல்கின்றனர் என்று எனக்குத் தெரியவந்தது. இது எப்படிக் கணக்கிடப்பட்டது என்று எனக்குத் தெரியாது. ஆனால், தினந்தோறும் இருபது லட்சம் ஜனங்கள் சினிமா பார்க்கச் செல்கின்றனர் என்பது சரியானால், இந்தியாவின் யுவர்களின் மனதின் பேரில் நாடு முழுவதையும் பாதிக்கக் கூடிய விதத்தில் இதன் பலன் ஏற்படும் என்பது மிகவும் தெளிவு. நான் ஒரு வருஷ காலமாக யாத்திரை செய்து வருகிறேன் என்பதைக் கணக்கிட்டறிந்தேன். தினந்தோறும் இரண்டு பிரசங்கங்கள் புரிந்து வந்தேன். இதைத் தவிர சர்ச்சைகளும் நடத்தி வந்தேன். இருந்தபோதிலும் இருபது லட்சம் ஜனங்களுடைய காதுகள் வரை என் செய்திகள் எட்டியிருக்குமா என்பது சந்தேகம். எனது ஒரு வருஷப் பிரயாசையினால் நடந்தேறிய பிரசாரம் தினந்தோறும் மாலையில் (சினிமாவினால்) நடைபெறுகிறதென்றால் இது ஒரு சாதாரண விஷயமல்ல. இவ்விஷயத்தில் கவனம் செலுத்துவது மிகவும் அவசியமாகிறது.

* * * *

114008

என் சர்ச்சைகளின் போது 'சினிமாவைக் கட்டுப் படுத்துவதனுல் நமது எண்ணங்களே வெளிப்படுத்தும் உரிமை பாதிக்கப்படுகிறது என்றதோர் வாதம் சினிமாக் கட்டுப்பாட்டிற்கு எதிராகச் சொல்லப்பட்டது. நமது அரசியலமைப்பில் எண்ணங்களே வெளியிடும் சுதந்திரமே ஒவ்வொரு பிரஜையினுடைய மூல உரிமையாகக் கருதப் பட்டுள்ளது. அந்த உரிமையின் பெயரால் தான் சினிமாக் கட்டுப்பாட்டின் மீது தாக்குதல் நடத்தப்படுகிறது எனச் சொல்லப்படுகிறது.

இம் மாதிரிச் சிந்திப்பது மிகவும் தவருகும். எண் ணங்களே வெளிப்படுத்தும் உரிமையைப் பறிப்பது என் பது—ஒரு வித எண்ணம், கொள்கையுடைய ஒரு கட்சி மற்ருெரு எண்ணம், கொள்கை உடைய கட்சியை அடக்க முயலுவதே ஆகும். ஆனல், எல்லோரும் ஒப்புக்கொள்ளக் கூடிய புத்திசாலித்தனம், ஒழுக்க விருத்தி, யுவர்களின் ஆண்மை இவைகளே மனதில் வைத்துக்கொண்டு சிந்திக்கத் தொடங்குவோமானல் சினிமாக் கட்டுப்பாட்டை உரி மையைத் தடுப்பதாகக் கருதுவது தவருகும். இம்மாதிரி யான எண்ணம் கொள்வது எண்ணங்களே வெளிப்படுத் தும் உரிமையையே புரிந்துகொள்ளாததாகும். யாராவ தொரு நபர் வேண்டுமென்றே ஹிம்சை, வியபிசாரம், கட் குடி முதலியவற்றைப் பரப்ப விரும்பினல் அவர் பேரில் விதிக்கும் கட்டுப்பாட்டை நாம் 'எண்ண வெளியீட்டு உரிமை' யைப் பறிப்பதெனக் கொள்ளலாமா? இதில் எந் தச் சமூகத்தினரின் குறிப்பிட்ட எந்த எண்ணத்தையும் ஒடுக்குவதாகக் கொள்ள இடமில்லே.

* * * *

நாம் இம்மாதிரியான கட்டுப்பாடுகளை ஒப்புக் கொள்ள மறுப்போமேயானல் நமது சுதந்திரம் நமது வீழ்ச்சியின் மறு பெயரே ஆகும்.

* * * *

இவ் விஷயத்தில் யதேச்சாதிகாரத்தால் பயன் பெருது. சினிமாக் கட்டுப்பாடனது எல்லோருடைய நன்னடத்தை யையும் கருதி, நல்ல ருசியை மனதில் வைத்துக்கொண்டு, பாரத நாட்டுப் பண்புகளையும் கவனத்தில் கொண்டு செய்யப்பட வேண்டும். நமது கட்டுப்பாட்டிற்கு இம் மூன்றுமே உரைகல்கள் ஆகும். நாம் இந்த உரைகல்களுக்கு மதிப்புக் கொடுத்து சினிமாக்களின் பேரில் உசிதமான கட்டுப்பாடுகள் விதிப்போமானல் இதனல் நாட்டிற்கு நலனே ஏற்படும். இல்லாவிடில், நாட்டைக் காப்பதே கடினமாகிவிடும் என்பதை உணருங்கள். [நல்லதோர் சேனையைக் காட்டிலும் நம் மூளைகளைச் சிதற விடாமல் அவைகளைச் சுத்தமான பாதையில் செலுத்துதல் மிகவும் அவசியமான காரியமென நான் கருதுகிறேன். நாம் நம் நாட்டை இம்மாதிரிக் காக்காவிடில் நமது சேனையில் கூட ஆண்மையிராது. ஜெனரல் கரியப்பா இவ்விஷயத்தைப் பற்றிக் கூறியிருப்பது அவருடைய க்ஷத்திரிய தர்மத்தை மிகவும் அனுசரித்த செயலாகும்.] சினிமாக் கட்டுப்பாட்டில் தளர்ச்சி காட்டுவது நம் அரசாங்கத்துக்குத் தகுதியல்ல. நமது அரசாங்கம் உலக க்ஷேம நலனைக் கருதி அமைந்துள்ளது. ஆகையால் உலக க்ஷேம நலனைக் கருத்தில் கொண்டு நல்லோர்களின் கருத்தை ஆதரமாக ஏற்றுக் கட்டுப்பாட்டிற்குக் கூடிய சீக்கிரம் ஏற்பாடுகள் செய்வது அரசாங்கத்தின் கடமையாகும்.

சென்னை ராஜ்யத்தின் அறிவிற்பெரிய முதியவ
ஸ்ரீ சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்
அவர்களின் கருத்து

(1) தொழிலாளர்களின் ஒரு கூட்டத்தில் அன்னு கூறியதாவது:—"சினிமாப்படத் தயாரிப்பாளர்கள் ஏழை மக்களின் அரிய வருவாயை அபகரித்தும், பொது மக்க ளின் நடத்தையைக் கெடுத்தும் வருகின்றனர். ××× அவர்கள் மக்களின் குறைபாடுகளை அறிந்திருக்கிறார்கள். ஆகவே ஆபாசமான படங்களைத் தயார் செய்து, பொது மக்களுடைய கீழ்த்தர உணர்ச்சிகளைத் தூண்டி அவர்களை துர்ப்பாக்கியசாலிகளாக ஆக்கி வருகின்றனர். உழைப் பாளி மக்கள் அடிக்கடி சினிமாக் கொட்டகைகள் பக்கப் போகாதிருப்பார்களானல் அவர்கள் தம் நேரத்தைத் தட குடும்பத்தைச் சுகமாக வைப்பதில் செலவு செய்யமுடியும

(2) மாணவர்களின் மனதை சினிமா பார்ப்பதினின் றும் திருப்ப முயற்சி செய்யும் வகையில் அன்னார் கூறிய தாவது:—"சினிமா பார்க்காமல் நீங்கள் உங்கள் வீட்டி லேயே இருக்கவேண்டும் அல்லது வேறு ஏதாவது வேலையில் ஈடுபடவேண்டும். நான் சினிமாவை எதிர்ப பவன் என்ற முறையில் இதைச் சொல்லவில்லை. ஆனல், தற்காலத்தில் சினிமாப்படங்கள் உங்களது மனதை மாசுபடுத்தி விடுகின்றன என்பதைக்கொண்டே சொல் கின்றேன். சினிமா பார்ப்பதனல் நீங்கள் ஒருபொழுதும் சிந்திக்கவே கூடாத பல விஷயங்களைப் பற்றிச் சிந்தி வருகிறீர்கள். இதனல் நீங்கள் உங்கள் நன்னடத்தை பாதை, ஆத்மீக வளர்ச்சி இவைகளினின்று வழுவி விடுவீர்

கள் என்பதோடுமட்டுமல்லாமல், உங்களது புத்திவளர்ச்சியும் பெரிதும் பாதிக்கப்படுவது தவிர்க்கமுடியாததாகும்."

உத்தரப் பிரதேச கவர்னர்
கனம் கே. எம். முன்ஷி அவர்கள் கருத்து

"××× மனிதன் அழகுள்ள வஸ்துக்களினால் அழகு பொருந்திய எண்ணங்களை நோக்கியும், அழகுள்ள எண்ணங்களின் மூலம் அழகுபொருந்திய வாழ்க்கையை நோக்கியும் முன்னேறுகிறான்; மேலும் அழகு பொருந்திய வாழ்கையினால் எங்கும் விளங்கும் பேரழகை (பரம்பொருளை) நோக்கிச் செல்கிறான்—எனப் பேரறிஞர் ப்ளேடோ கூறியிருக்கிறார். ஆனால் ஹாலிவுட்டில் நிலவி வரும் அருவருக்கத்தக்க சூழ்நிலையை அனுசரித்துத் தயார் செய்யப்பட்ட மட்டரகமான படங்கள் நம்மை வெறுக்கத்தக்க எண்ணங்களை நோக்கியும், வெறுக்கத்தக்க எண்ணங்களின் மூலம் வெறுக்கத்தக்க வாழ்க்கையை நோக்கியும் இட்டுச்செல்கின்றன. இப்பேர்ப்பட்ட வாழ்க்கையினால் நாம் அருவருப்பான உருவம், எண்ணம் இவைகளை நோக்கிச் செல்லுகின்றோம். இம்மாதிரியான நீதி நெறியற்ற படங்களை நிர்மாணிப்பதில் உதவி புரியும் எந்த நபரும்—அவர்களில் பலர் தம் சுயவாழ்க்கையில் பண்பும் நாகரீகமும் உடையவர்களாயிருப்பவர்—எப்பொழுதாவது தாங்கள் பொது மக்கள் முன்பு, முக்கியமாக யுவர்கள் யுவதிகள் முன்பு, எம்மாதிரியான ஆபாசமான படங்களைக் காட்டுகின்றனர் என்பதைப் பற்றிச் சிந்தித்தனரா? இம்மாதிரியாக அவர்கள் ஏன் செய்கிறார்கள்? இதற்கு

ஒரே ஒரு பதில்தான் உண்டு—பாமர மக்களின் கீழ்த்த மான உணர்ச்சிகளைத் தூண்டி அதன் மூலம் பண பெறவே தான்!

"கல்வித் துறையில்கூட சினிமாவினல் மற்ெரு பெரிய ஆபத்து உள்ளது. நம் கலாச்சாரத்தில் சத்திய அஹிம்சை இரண்டும் முக்கியமான இடம் பெற்றுள்ள காந்தியடிகள் இந்த இரண்டு தத்துவங்களையும் நம் பார மக்களின் புதிய சக்திக்கு ஆதராமானதாகச் செய்து விட்டுச் சென்றுள்ளார். சமாதானம், நியாயம் இவை களைத் தாங்கும் தூதரான நமது பிரதம மந்திரி நேருஜ் காந்தியடிகள் விட்டுச்சென்ற மேற்கண்ட சொத்தைச் காப்பதில் முனைந்துள்ளார், அவர் ஹிம்சையை எதி நாட்டு மக்கள் விழிப்புடன் இருக்குமாறு அறைகூவி வ கிறார். ஆனல் இம்மாதிரியான சினிமாப் படங்களே குற்றம் புரிவதையும் ஹிம்சை புரிவதையும் முக்கியமாக கொண்டுள்ளன. நாள்தோறும் ஆயிரக் கணக்கான தியேட்டர்களில் லட்சக்கணக்கான மக்களுக்குக் குற்ற கொலை, கீழ்த்தரச் செயல்கள், ஆபாச வாழ்க்கை முத யன நடத்தப் பயிற்சியளிக்கப் பட்டுவருகிறது, இவ்வி மாக மக்களின் மேலான எண்ணங்களையும் அழ உணர்ச்சிகளையும் கெடுத்துவருகின்றனர். பத்திரி களின் ஹாஸ்யப் பகுதிகளுங்கூட கொலை, கொள்ளை, அ கரித்தல், முதலிய சம்பவங்களை நித்திய வாழ்க்கையி அம்சமாகக்கருதி அவற்றுக்கு மதிப்புக் கொடுத்துப் பொ மக்கள் மனதில் குற்றம் புரியும் மனப்பான்மை வளர்த்து வருகின்றன. இந் நிலையில் நாடு முழுவதி

ஹிம்சையும் குற்றம் புரிதலும் வியாதி போல் பரவி வரு மானல் அதில் ஆச்சரியப்படவேண்டிய விஷயம் யாது மில்லை.

"லக்ஷ்மணபுரியில் ஹஜரத்கஞ்சின் வீதிகளில் பல வாலிபர்கள் ஆபாசமான சினிமாப் படங்கள் அச்சிட்ட துணிகளைக் கொண்டு புஷ் ஷர்ட்கள் தைத்து அணிந்து கொண்டு உலாவி வருவதாக அறிந்தேன். இந்த வாலி பர்களில் பலர் சர்வகலாசாலை மாணவர்களும் உள்ள னர் என அறிந்தேன். ஆனல் இதை என்னல் நம்பமுடியா வில்லை. மதிப்பு வாய்ந்த குடும்பத்தைச் சேர்ந்த ஒரு வாலி பன் எவ்வாறு இம்மாதிரியான அருவருப்பைத் தரும் வேஷத்தோடு பொது இடங்களில் நடமாட முடியும் ன்றே எனக்குத் தோன்றவில்லை."

உத்தரப் பிரதேசத்துக் கல்வி மந்திரி ஸ்ரீ ஹரிகோவிந்த சிங்ஜீ கூறுவதாவது

சில நாட்களுக்கு முன்பு பம்பாய் மெயில் யாத்திரை செய்து கொண்டிருந்த ஒரு சினிமா நடிகையைப் பார்ப் பதற்காக அலஹபாத் ஸ்டேஷனில் ஆயிரக் கணக்கான மக்கள் கூடி விட்டனர். அவர்களில் மாணவர்களின் எண் ணிக்கையும் அதிகமாகவே இருந்தது. வண்டி அரை மணி நேரம் தங்க வேண்டியதாயிற்று. ஆர்வம் கொண்ட சினி மாப் பிரியர்கள் அந்த நடிகை உட்கார்ந்திருந்த வண்டி யின் ஜன்னல் கண்ணுடியை உடைத்துக் கொண்டே அந் நடிகைக்கு ஜெயகோஷ மிட்டார்கள். இந்தக் குழப்பத்தில் நான்கு பேர் காயமுற்றனர். யாராவதொரு மஹாத்மா, பெரிய மனிதர், பெரிய தலைவரது தரிசனத்துக்காக

ஜனங்கள் கூடுவது அவர்களது நன்னெறிப் பற்றுதலைக் காட்டுவ போல, பற்பல விதமான ஆடல் பாடல், அபிநயங்கள், பாவங்கள் பிடிப்பதிலேயே தேர்ச்சி பெற்ற தோர் நடிகையைப் பார்ப்பதற்காகக் கூட்டம் கூடுவதும் குழப்பம் விளைவிப்பதும் நெறி தவறி வீழ்ச்சியுற்று, அடக்கமின்றித் திரிவதையே காட்டுவதாகும். அதே, ... பாக்கியமான சம்பவத்தைக் குறித்து உத்திர பிரதேசத்... கல்வி மந்திரி ஸ்ரீ ஹரிகோவிந்த சிங்ஜீ சொன்னதாவது—

"××× பல்வேறு இடங்களில் மாணவர் சமுதாயம் ஈடுபட்டு வரும் செயல்களைப் பற்றிக் கேள்வியுற்று நான் வெட்கத்தால் தலை குனிகின்றேன். [அலஹாபாத் ஸ்டேஷனில் ஓர் சினிமா நடிகைக்கு (காமினி கௌஷலுக்கு) ஜெயகோஷம் கிளப்பி மாணவர்கள் காட்டியுள்ள ஒழுக்கம் தான் இன்றையக் கல்வியறிவின் நோக்கமா? அப்படியானல் நாட்டிலுள்ள எல்லாக் கல்லூரிகளையும் சர்வகலா சாலைகளையும் மூடிவிடுவதையே நான் பெரிதும் விரும்புவேன். [' காமினி கௌஷலுக்கு ஜே' போடுவதற்கா... தான் நாம் மாணவர்களைத் தயார் செய்து வருகின்றோமா] ஒருநாள் நைநிதாலில் ஒரு பெரிய ஜனக் கூட்டம் சென்று கொண்டிருந்ததைப் பார்த்தேன். விசாரித்ததின் பேரில் அங்கு ஏதோ ஒரு தியேட்டரில் ஒரு சினிமா நடிகை வந்திருப்பதாகக் கேள்விப்பட்டேன். இன்றைய மாணவர்களுக்கு சினிமா நடிகைகளைப் பற்றிய ஒவ்வொரு சமாச்சாரமும் தெரியும், ஆனல் தன் நாட்டின் சரித்திரம், தன் தேசத்துத் தலைவர்கள், இவர்களைப்பற்றிய விவரங்களே தெரிவதில்லை. என்னே நமது வீழ்ச்சி!

114008